[திரு. சி. ஞானசேகரன்] [*1996* ஆகஸ்டு *5*

குறிப்பிடவில்லை. உண்மைக்குப் புறம்பாக எதையும் குறிப்பிடவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மகளிரே நடத்துகின்ற கூட்டுறவுக் கடையை, 800-க்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கும் கடையைப் பிரித்து உடனடியாக அமைக்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் பல கடைகளில் இந்தப் பிரச்சினை இருக்கிற காரணத்தினால், எவ்வளவு நாட்களுக்குள், மகளிரே நடத்துகின்ற நியாயவிலைக் கடைகள் தமிழகத்திலே துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களிலே இடங்கள் கிடைப்பதிலே கொஞ்சம் சிரமம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இடத்திலே, அவர் எப்போது இடம் பார்த்துத் தந்தாலும் அங்கே கடை திறக்கப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களை பேரவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுத்தல் தொடர்பான கால அட்டவணை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு (செனட்) *6* உறுப்பினர்களையும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு *4* உறுப்பினர்களையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தலா இரண்டு உறுப்பினர்களையும், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஒரு உறுப்பினரையும், அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு (சிண்டிகேட்)விற்கு ஒரு உறுப்பினரையும் பேரவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஆகியவற்றினுடைய, நிர்வாகக் குழுவிற்கு - Board of Management-க்கு, தலா ஒரு

உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.

முற்பகல் 10-50

தமிழ்நாடு அநாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் நிர்வாகக் குழுவிற்கு 3 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். எனினும், குறிப்பிட்ட ஆட்சி மன்றப் பேரவைகள் மற்றும் ஆட்சிக் குழு-நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களுடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட விழையும் வேட்பாளர்கள், நியமனத் தாள்களை 8-8-1996 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 9-8-1996 அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 10-8-1996 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட மேற்படுமாயின் 16-8-1996 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையே சென்னை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில், குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) பேரவை அலுவல் குறித்து

பேரவைக்கு அடுத்த அறிவிப்பு. 3-8-1996 ஆம் நாளன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

7-8-1996 அன்று பேரவை மாலையிலும் 4-30 மணிக்குக் கூடும். அப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 1-8-1996 அன்று பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அடுத்து, 3-8-96 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மற்றும் 1995-96-க்கான திருத்திய மதிப்பீடுகள் மீதான விவாதம் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்படும்.